தின கனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066
namadhudhinakani@gmail.com
www.dhinakani.com

RNI-TNTAM/2023/88253


# நமது தின கனி

NAMADHU DHINA KANI
காலை நாளிதழ்




Vol: 02 | Issue: 173 | 4 Pages | 20.1.2025 | Monday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825

மலர்: 02 | இதழ்: 173 | 4 பக்கங்கள் | 20.1.2025 | திங்கட்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825



**சிறப்பீனுஞ் செல்வம் பெறினும் பிறர்க்கின்னா**
**செய்யாமை மாசற்றார் கோள்**

**விளக்கம்:** சிறப்பைத்தருகின்ற பெருஞ் செல்வத்தைப் பெறுவதாக இருந்தாலும், பிறர்க்குத் துன்பம் செய்யாதிருத்தலே மாசற்றவரின் கொள்கையாம்.

## பயிற்சி பெண் டாக்டர் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டு கொலை: சஞ்சய் ராய் குற்றவாளி



கொல்கத்தா, ஜன.20

மேற்குவங்காள மாநிலம் கொல்கத்தாவில் ஆர்.கே. கர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை உள்ளது. இந்த மருத்துவமனையின் 3வது மாடியில் உள்ள கருத்தரங்கு கூடத்தில் கடந்த ஆண்டு ஜூன் மாதம் 9ம் தேதி பயிற்சி பெண் டாக்டர் (வயது 31) அரை நிர்வாண நிலையில் பிணமாக மீட்கப்பட்டார்.

2ம் ஆண்டு மருத்துவ மேல்படிப்பு படித்து வந்த பயிற்சி பெண் டாக்டர் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டு கொல்லப்பட்டது பிரேத பரிசோதனையில் தெரியவந்தது. இந்த சம்பவம் நாடு முழுவதும் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்திய நிலையில் போலீசார் விசாரணையை தீவிரப்படுத்தினர்.

விசாரணையில் மருத்துவமனையில் தன்னார்வலராக பணியாற்றி வந்த சஞ்சய் ராய் என்பவர் பயிற்சி பெண் டாக்டரை பாலியல் வன்கொடுமை கொலை செய்தது தெரியவந்தது. இதையடுத்து சஞ்சய் ராயை போலீசார் கைது செய்தனர். மேலும், இந்த சம்பவம் தொடர்பாக நாடு முழுவதும் டாக்டர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதையடுத்து, இந்த வழக்கு சிபிஐ வசம் ஒப்படைக்கப்பட்டது. விசாரணையை தொடங்கிய சிபிஐ பல்வேறு நபர்களிடம் விசாரணை மேற்கொண்டது. சாட்சியங்களை அழிக்க முயன்றதாக ஆர்.கே.கர் மருத்துவமனை முதல்வர் சந்தீப் கோஷை சிபிஐ கைது செய்தது. ஆனால், அவர் பின்னர் ஜாமீனில் விடுதலையானார்.

இதனிடையே, இந்த வழக்கில் 50க்கும் மேற்பட்டோரிடம் சிபிஐ விசாரணை நடத்தியது. பெண் டாக்டர் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டு கொல்லப்பட்ட வழக்கு சீல்டா மாவட்ட கோர்ட்டில் நடைபெற்று வந்தது. அனைத்து வாதங்களும் கடந்த 9ம் தேதி நடைபெற்றது. அதன்பின்னர், தீர்ப்பிற்காக வழக்கு ஒத்திவைக்கப்பட்டது.

இந்நிலையில், பெண் டாக்டர் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டு கொல்லப்பட்ட வழக்கில் சீல்டா மாவட்ட கோர்ட்டு இன்று தீர்ப்பளித்தது. இந்த வழக்கில் கைது செய்யப்பட்டுள்ள சஞ்சய் ராய் குற்றவாளி என்று கோர்ட்டு தீர்ப்பளித்தது.

குற்றவாளி சஞ்சய் ராய்க்கான தண்டனை விவரம் நாளை மறுதினம் (20ம் தேதி) அறிவிக்கப்படும் என்று கோர்ட்டு தெரிவித்துள்ளது.

## ஆபிரகாம் லிங்கனின் பைபிள் மீது உறுதிமொழி ஏற்கும் டிரம்ப்




வாஷிங்டன், ஜன.20


அமெரிக்காவில் கடந்த நவம்பரில் நடந்த ஜனாதிபதி தேர்தலில், குடியரசு கட்சி சார்பில் டொனால்டு டிரம்ப் போட்டியிட்டு வெற்றி பெற்றார். இதையடுத்து, அமெரிக்காவின் 47வது ஜனாதிபதியாக அவர் பதவியேற்க உள்ளார். அவரது பதவியேற்பு விழா வரும் 20ந்தேதி நடைபெற உள்ளது.

இதற்கான ஏற்பாடுகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. இந்த விழாவில் பங்கேற்க பல்வேறு உலக நாடுகளின் தலைவர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இந்தியா சார்பில், மத்திய வெளியுறவுத்துறை மந்திரி ஜெய்சங்கர் அமெரிக்க ஜனாதிபதியின் பதவியேற்பு விழாவில் பங்கேற்பார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், பதவியேற்பு விழாவின்போது டிரம்ப் பயன்படுத்த உள்ள பைபிள் குறித்த தகவல் வெளியாகியுள்ளது. இதன்படி, பதவியேற்பு விழாவில் டிரம்ப், மறைந்த தனது தாய் தனக்கு கொடுத்த பைபிள் மற்றும் மறைந்த முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஆப்ரகாம் லிங்கன் பயன்படுத்திய பைபிள் ஆகியவற்றின் மீது உறுதிமொழி எடுக்க உள்ளார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2017ம் ஆண்டு அமெரிக்க ஜனாதிபதியாக பதவியேற்ற போதும், லிங்கனின் பைபிளை கொண்டு டிரம்ப் பதவியேற்றிருந்தார். முன்னதாக அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி ஒபாமா, கடந்த 2009 மற்றும் 2013 ஆகிய இருமுறை ஜனாதிபதியாக பொறுப்பேற்றபோதும் லிங்கனின் பைபிளை பயன்படுத்தி உறுதிமொழி ஏற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

## குளிருக்காக மூட்டிய நெருப்பு புகையால் மூச்சுத்திணறி தம்பதி பலி



டேராடூன்,, ஜன.20

உத்தரகாண்ட் மாநிலத்தில் குளிருக்காக மூட்டிய நெருப்பால் மூச்சுத்திணறி தம்பதி உயிரிழந்த சம்பவம் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. அரசு இடைநிலைக் கல்லூரியில் எழுத்தராக பணிபுரிபவர் மதன் மோகன் செம்வால் (52 வயது). அவரது மனைவி யசோதா தேவி (48 வயது). இருவரும் பிலங்கானா பகுதியில் உள்ள துவாரி தப்லா கிராமத்தில் நடைபெற்ற திருமண விழவால் கலந்து கொள்வதற்காக வந்துள்ளனர்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் இரவு 11 மணியளவில் கடும் குளிர் காரணமாக குளிர்காய்வதற்காக நெருப்பை மூட்டி அதனை அறைக்குள் வைத்து கதவை பூட்டி தூங்கியுள்ளனர். இந்த நிலையில் நெருப்பில் இருந்து வெளியேறிய புகையால் தூக்கத்திலேயே இருவரும் மூச்சுத்திணறி உயிரிழந்தனர். நேற்று காலையில் அவர்களது மகன் அவர்களை எழுப்ப கதவை தட்டும் போது உள்ளிருந்து எந்த பதிலும் வரவில்லை.

இதனால் சந்தேகமடைந்த அக்கம் பக்கத்தினர் கதவை உடைத்துச் சென்று பார்த்தனர். அப்போது தம்பதி படுக்கையில் இறந்து கிடந்தனர். இதையடுத்து தம்பதியின் உடலை உள்ளூர் மக்கள் போலீசாருக்கு தெரிவிக்காமல் தகனம் செய்ததாக கூறப்படுகிறது. இந்த சம்பவம் தொடர்பாக போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# தி.மு.க.வில் இணைந்தார் நடிகர் சத்யராஜின் மகள் திவ்யா



சென்னை, ஜன.20

நடிகர் சத்யராஜின் மகளும் ஊட்டச்சத்து நிபுணருமான திவ்யா சத்யராஜ் இன்று முதல்அமைச்சரும், தி.மு.க. தலைவருமான மு.க.ஸ்டாலின் முன்னிலையில் அக்கட்சியில் தன்னை இணைத்துக் கொண்டார். நடிகர் சத்யராஜ் திராவிடக் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டவர் என்பது அனைவரும் அறிந்ததே. இந்நிலையில் அவரது மகள் திவ்யா இன்று தி.மு.க.வில் இணைந்துள்ளார்.

இது தொடர்பாக தி.மு.க. சார்பில் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், "தமிழக முதல்அமைச்சர், கழகத் தலைவர் முன்னிலையில், இன்று (19.1.2025) காலை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில், நடிகர் சத்யராஜின் மகளும், ஊட்டச்சத்து நிபுணருமான திவ்யா சத்யராஜ் தி.மு.க.,வில் இணைந்தார்.

அப்போது, கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு, எம்.பி., முதன்மைச் செயலாளர் கே.என். நேரு, சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளர் பி.கே.சேகர்பாபு ஆகியோர் உடனிருந்தனர்" என்று அதில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

## தமிழ்நாட்டில் பெண் காவலர்களுக்கே பாதுகாப்பு இல்லை எடப்பாடி பழனிசாமி



சென்னை, ஜன.20

அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில்,

திமுகவின் ஸ்டாலின் மாடல் ஆட்சியில் தமிழ்நாட்டில் பெண்களுக்கு பாதுகாப்பு இல்லை என்பதைத் தாண்டி, தற்போது பெண் காவலர்களுக்கே பாதுகாப்பு இல்லாத அவலமும் தொடர்கிறது.

ஒரே நாளில் சென்னை தாம்பரம் ஆணையரக காவல் எல்லைக்குட்பட்ட பகுதிகளில், சென்னை மாநகர காவல் ஆணையர் அலுவலகத்தில் பணிபுரியும் பெண் உதவி ஆய்வாளர் உள்ளிட்ட 8 பேர் நகைப் பறிப்பு சம்பவங்களால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று வரும் செய்திகள் அதிர்ச்சியளிக்கின்றன.

ஒரு பெண் உதவி ஆய்வாளர், இரண்டு மளிகைக் கடை மற்றும் உணவகத்தில் இருந்த மகளிர்கள், குழந்தைக்கு உணவு ஊட்டும் தாய், இருசக்கர வாகனத்தில் பயணித்தோர் என்று அனைவரும் தங்களது நகைகளை பறிகொடுத்திருப்பது, இந்த ஆட்சியாளர்களின் கையாலாகாத்தனத்தைக் காட்டுகிறது.

தமிழ்நாட்டில் காவலர் உட்பட யாரும் பாதுகாப்பாக நடமாட முடியாத சூழ்நிலை உள்ளது என்பது வெட்கக்கேடான நிலை; இந்த நிலைக்கு காரணமான நிர்வாகத் திறனற்ற ஸ்டாலின் மாடல் அரசு தலைகுனிய வேண்டும்.

நகைப் பறிப்பு போன்ற குற்றங்கள் சர்வசாதாரணமாக நடக்கும் அளவிற்கு சட்டம் ஒழுங்கு சீர்குலைந்து போனதற்கு காவல்துறையை தன் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் ஸ்டாலின் அவர்களே முழு பொறுப்பு ஏற்கவேண்டும்!

நகைப் பறிப்பில் ஈடுபட்டுள்ள குற்றவாளிகள் மீது உரிய சட்ட நடவடிக்கை எடுப்பதுடன், சுய விளம்பரங்களில் செலுத்தும் அதே கவனத்தை சட்டம் ஒழுங்கைக் காப்பதிலும் செலுத்துமாறு திமுக அரசை வலியுறுத்துகிறேன். என தெரிவித்துள்ளார் .

## பாடப்புத்தகங்களை அச்சடிக்கும் பணியை அண்டை மாநிலத்திற்கு வழங்குவதா? டி.டி.வி.தினகரன் கண்டனம்



சென்னை, ஜன.20

அ.ம.மு.க. பொதுச்செயலாளர் டி.டி.வி.தினகரன் தனது எக்ஸ் வலைத்தளப்பக்கத்தில் வெளியிட்ட பதிவில் கூறியிருப்பதாவது:

தமிழகத்தில் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு வழங்கப்படும் புத்தகங்களை அச்சிடும் பணியில் 30 சதவிகிதம் ஆந்திர மாநிலத்தில் உள்ள அச்சகங்களுக்கு வழங்கப்பட்டிருப்பதாக நாளிதழ்களில் செய்திகள் வெளியாகி உள்ளன.

சிவகாசியில் பட்டாசு மற்றும் தீப்பெட்டி தொழிலுக்கு அடுத்தபடியாக அச்சுத்தொழில் விளங்கி வரும் நிலையில், அங்குள்ள அச்சகங்களை புறக்கணித்துவிட்டு, அண்டை மாநிலத்திற்கு அப்பணியை வழங்கியிருப்பது கடும் கண்டனத்திற்குரியது.

தமிழக அரசின் இம்முடிவால், ஒவ்வொரு ஆண்டும் குறிப்பிட்ட மாதங்களில் மட்டுமே நடைபெறும் இந்த அச்சுத் தொழிலை மட்டுமே நம்பியிருக்கும் அச்சக உரிமையாளர்களோடு, அதில் பணியாற்றிக் கொண்டிருக்கும் ஆயிரக்கணக்கான தொழிலாளர்களின் வாழ்வாதாரமும் கேள்விக்குறியாகி உள்ளது.

தமிழகத்தில் உள்ள அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு வழங்கப்படும் புத்தகங்கள் அனைத்தும் தமிழகத்திலேயே அச்சிடும் அளவிற்கான அச்சகங்கள் இருந்தும் அண்டை மாநிலங்களுக்கு அப்பணியை வழங்குவது ஏன்? என அச்சக உரிமையாளர்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

எனவே, ஆந்திர மாநிலத்தில் உள்ள அச்சகங்களுக்கு வழங்கப்பட்ட பாடப்புத்தகங்கள் அச்சடிக்கும் பணிக்கான ஆணையை உடனடியாக ரத்து செய்வதோடு, அச்சுத்தொழிலை மட்டுமே வாழ்வாதாரமாக கொண்டிருக்கும் உரிமையாளர்களும், தொழிலாளர்களும் பயன்பெறும் வகையில் தமிழகத்தில் உள்ள அச்சகங்களுக்கே முழு பணியையும் வழங்க வேண்டும் என தமிழக அரசை வலியுறுத்துகிறேன்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஆணவத்தில் பேசுகிறார் சேகர்பாபு: அண்ணாமலை காரசாரமான பேச்சு



சென்னை, ஜன.20

திருச்செந்தூர் முருகன் கோவிலில் சுவாமி தரிசனத்திற்காக பக்தர்கள் நீண்ட நேரம் காத்திருந்தனர்.

இது குறித்து அவர்கள் கேள்வி எழுப்பியிருந்த நிலையில், இதனை திருப்பதி கோவிலில் கூட்ட நெரிசலுடன் ஒப்பிட்டு அமைச்சர் சேகர்பாபு பேசியிருந்தார். திருப்பதியில் மட்டும் 24 மணி நேரம் நிற்பான்" என்று அமைச்சர் சேகர்பாபு கூறியிருந்தார். இவரது கருத்துக்கு கடும் எதிர்ப்புகள் எழுந்திருக்கின்றன.

இந்தநிலையில், தமிழக பாஜக தலைவர் அண்ணாமலை எக்ஸ் தள பதிவில் கூறியதாவது:

திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி திருக்கோவிலில், ஆறு மணி நேரத்திற்கும் அதிகமாக, குழந்தைகள், பெண்கள், முதியவர்கள் உள்ளிட்ட பக்தர்களை, உணவு, தண்ணீர் இன்றி, அடைத்து வைத்திருக்கின்றார்கள்.

இது குறித்து பக்தர்கள் புகார் தெரிவித்தபோது, "திருப்பதி கோவிலில் மட்டும் 24 மணி நேரம் நிற்பான்" என்று ஒருமையில் அலட்சியமாகப் பதில் அளித்திருக்கிறார் அமைச்சர் சேகர்பாபு.

திருப்பதி கோவிலில் பொதுமக்களுக்கு உணவு, தண்ணீர், கழிப்பறை உள்ளிட்ட போதிய வசதிகள் செய்திருக்கிறார்கள். உங்களைப் போல, கோவில் உண்டியல் பணத்தை முறைகேடாகச் செலவழிப்பதில்லை. கோவிலுக்கு வரும் பக்தர்கள், தங்கள் நேர்மையான உழைப்பில் கிடைக்கும் பணத்தில் சிறு பகுதியை, கோவில்களுக்குக் காணிக்கையாகக் கொடுக்கிறார்கள். உங்களைப் போல, கோவில் பிரசாதத்தில் கமிஷன் அடிப்பதில்லை.

கோபாலபுரம் குடும்பத்திற்கு நெருக்கம் என்ற ஆணவத்தில் பேசிக்கொண்டிருக்கிறார் அமைச்சர் சேகர்பாபு. இதை விட அதிகார மமதையில் ஆடியவர்களுக்கெல்லாம், காலம் பாடம் புகட்டியிருக்கிறது என்பதை அமைச்சருக்கு நினைவுபடுத்துகிறேன்.

காலம் மாறும். தனது ஒவ்வொரு தவறுக்கும், அமைச்சர் சேகர்பாபு, ஆண்டவனுக்கும், பொது மக்களுக்கும் பதில் சொல்லத் தயாராக இருந்து கொள்ளட்டும் என பதிவிட்டுள்ளார்.

# வாணியம்பாடி அருகே அம்பேத்கர் உருவப்படம் அவமதிப்பு பொதுமக்கள் சாலை மறியல்



வாணியம்பாடி, ஜன.20

திருப்பத்தூர் மாவட்டம், வாணியம்பாடி அடுத்த நெக்குந்தி ஆதிதிராவிடர் பகுதியில் பெயர் பலகையில் அம்பேத்கர் உருவபடம் வரையப்பட்டுள்ளது.

இதில் அம்பேத்கரை அவமதிக்கும் வகையில், படம் பெயர் பலகை மீது மர்மநபர்கள் மாட்டு சாணத்தை வீசி அவமதித்து உள்ளனர். இதனைக் கண்டு அதிர்ச்சி அடைந்த அந்த பகுதி மக்கள் உடனடியாக தேசிய நெடுஞ்சாலையில் ஒன்று திரண்டனர். குற்றவாளிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தி திடீரென சாலைமறியலில் ஈட்டுபட்டனர்.

இது குறித்து தகவல் அறிந்த டவுன் போலீசார், விரைந்து சென்று பொதுமக்களிடம் பேச்சுவர்த்தை நடத்தினர்.

இதுகுறித்து உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதி அளித்தனர். இதனைத் தொடர்ந்து அனைவரும் போராட்டத்தை கைவிட்டு அங்கிருந்து கலைந்து சென்றனர்.

இதனால் அந்த பகுதியில் வாகனங்கள் ஒன்றன் பின் ஒன்றாக சுமார் ஒரு கிலோ மீட்டர் தொலைவிற்கு அணிவகுத்து நின்றன. போக்குவரத்து கடுமையாக பாதித்தது. போலீசார் போக்குவரத்து சரி செய்யும் பணியில் ஈடுபட்டனர். இந்த சம்பவம் அந்த பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

# போக்குவரத்து தொழிலாளர்களின் சிறை நிரப்பும் போராட்டம் சி.ஐ.டி.யு. அறிவிப்பு

சென்னை, ஜன.20

தமிழ்நாடு அரசு போக்குவரத்து ஊழியர் சம்மேளன பொதுச் செயலாளர் கே. ஆறுமுகநயினார் கூறியதாவது:

தமிழகத்தில் போக்குவரத்துக் கழகங்களுக்கு ஏற்படும் இழப்பை அரசு ஈடு செய்வதில்லை. இதனால் போக்குவரத்துக் கழகங்கள் கடும் நிதிநெருக்கடியில் இருந்துவருகின்றன. பஸ் மூலம் உத்தேசமாக ரூ.100 வசூலானால் அதில் ரூ.12ஐ வங்கியில் இருந்து பெற்ற கடனுக்கான வட்டியாக செலுத்தவேண்டியுள்ளது.




தினமும் ஒரு கோடி கி.மீ இயக்கப்பட்ட அரசு பஸ்கள் தற்போது 80 லட்சம் கி.மீ. மட்டுமே இயக்கப்படுகின்றன. அதாவது, ஏராளமான வழித்தடங்களில் பஸ் நிறுத்தப்பட்டு உள்ளன. வாரிசு வேலை மறுப்பது: பஸ் எண்ணிக்கையைக் குறைப்பது என அ.தி.மு.க. ஆட்சியில் பிறப்பிக்கப்பட்ட 8 அரசாணைகளை தி.மு.க. அரசு தீவிரமாகச் செயல் படுத்தி வருகிறது. எனவே, போக்குவரத்துக் கழகங்களின் வரவுக்கும், செலவுக்குமான வித்தியாசத் தொகையை வழங்க வேண்டும். போக்குவரத்து கழகங்களை மேம்படுத்தும்நடவடிக்கைகளை எடுப்பதுடன், மறைமுகமாக தனியார் மயமாக்கும் நடைமுறையைக் கைவிட வேண்டும். பணியில் இருந்து ஊழியர்கள் ஓய்வு பெறும்போது, ஓய்வு பெறும் அன்றே ஓய்வு கால பலன், ஓய்வூதியர்களுக்கான அகவிலைப்படி உயர்வு, மருத்துவக் காப்பீடு உள்ளிட்டவற்றை வழங்க வேண்டும். தேர்தல் வாக்குறுதி அடிப்படையில் பழைய ஓய்வூதியத்திட்டத்தை அமல் படுத்துவதுடன், காலிப் பணியிடங்களைப் நிரப்ப வேண்டும். வாரிசுவேலை வழங்க வேண்டும்.

ஊதிய ஒப்பந்தத்தைப் பேசி முடிவு செய்ய வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி வருகிற 22ந் தேதி தமிழகம் முழுவதும் சிறை நிரப்பும் போராட்டத்தை நடத்த உள்ளோம்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# திருக்கழுக்குன்றம் அருகே மோட்டார் சைக்கிள் மீது கார் மோதி வாலிபர் சாவு

மாமல்லபுரம், ஜன.30

திருக்கழுக்குன்றம் அடுத்த வடக்குப்பட்டு பகுதியை சேர்ந்தவர் தேவேந்திரன் (வயது 30). இவர் தனது மோட்டார் சைக்கிளில் திருக்கழுக்குன்றம்சென்றுவிட்டு, வடக்குப்பட்டுக்கு திரும்பி வந்து கொண்டிருந்தார்.

அப்போது, அடையாளம் தெரியாத கார் ஒன்று மோட்டார் சைக்கிள் மீது மோதியது.

இதில் அவர் படுகாயம் அடைந்தார்.

திருக்கழுக்குன்றம் போலீசார் அவரை மீட்டு செங்கல்பட்டு அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தனர். அங்கு சிகிச்சை பலனின்றி தேவேந்திரன் உயிரிழந்தார். இந்த விபத்து குறித்து திருக்கழுக்குன்றம் போலீசார் விசாரித்து வருகின்றனர்.

# திருப்பூரில் 3 கார்கள் தீ வைத்து எரிப்பு போலீசார் விசாரணை



திருப்பூர், ஜன.20

திருப்பூர் கோல்டன் நகர் தொட்டி மண்ணரை பகுதியை சேர்ந்தவர் கோகுலகண்ணன் (வயது 28). இவர் அப்பகுதியில் கார் விற்பனை நிலையம் நடத்தி வருகிறார். இதற்காக கார்களை அவரது வீட்டின் அருகே உள்ள காலி இடத்தில் நிறுத்தி வைத்திருந்தார். நேற்றிரவு திடீரென நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கார்கள் தீப்பிடித்து எரிந்தன.

உடனே இதுகுறித்து திருப்பூர் வடக்கு தீயணைப்பு நிலையத்திற்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. தீயணைப்பு நிலைய வீரர்கள் விரைந்து சென்று கார்களில் பற்றி எரிந்த தீயை அணைத்தனர். இருப்பினும் 3 கார்கள் முற்றிலும் தீப்பிடித்து எரிந்து சேதமாகின. அவற்றின் மதிப்பு ரூ.20 லட்சம் இருக்கும்.


கார்களில் தீப்பற்றியது எப்படி என்பது தெரியவில்லை. தொழில் போட்டி காரணமாக யாராவது கார்களை தீ வைத்து எரித்தனரா அல்லது வேறு ஏதேனும் காரணமா? என திருப்பூர் வடக்கு போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர். மேலும் அப்பகுதியில் உள்ள சி.சி.டி.வி. கேமராக்களில் பதிவான காட்சிகளை பார்வையிட்டு ஆய்வு செய்து வருகின்றனர்.

# பீரோ தயாரிக்கும் கம்பெனியில் தீ விபத்து பல லட்சம் ரூபாய் மதிப்பிலான பொருட்கள் சேதம்

சின்னாளப்பட்டி, ஜன.20

திண்டுக்கல் மாவட்டம் சின்னாளப்பட்டி பூஞ்சோலையில் இருந்து பஸ் நிலையம் செல்லும் சாலையில் முத்துராஜ் (வயது 50) என்பவர் இரும்பு பீரோ, கட்டில் செய்யும் கம்பெனி நடத்தி வருகிறார்.

பொங்கல் பண்டிகையையொட்டி பீரோ கம்பெனிக்கு கடந்த சில தினங்களாக விடுமுறை விடப்பட்டுள்ளது. இந்நிலையில் பூட்டி வைக்கப்பட்டிருந்த அந்த பீரோ கம்பெனியில் இன்று காலை பெயிண்ட் அடுக்கி வைக்கப்பட்டிருந்த அறையில் இருந்து கரும்புகை வெளி வந்தது.



இதனை அக்கம் பக்கத்தில் வசிப்பவர்கள் பார்த்து அதிர்ச்சி அடைந்தனர். சில நிமிடங்களில் தீ மளமளவென பற்றி எரிந்தது. இதனால் அப்பகுதி முழுவதும் புகை மூட்டம் சூழ்ந்தது. பொதுமக்கள் கம்பெனியில் தீப்பற்றி எரிவதை பார்த்து தங்கள் வீடுகளுக்கும் தீ பரவிவிடுமோ என்ற அச்சத்தில் வீட்டை விட்டு வெளியே ஓடி வந்தனர்.

மேலும் இதுகுறித்து தீயணைப்பு துறையினருக்கு தகவல் தெரிக்கப்பட்டது. அதன் பேரில் தீயணைப்பு துறையினர் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து தண்ணீரை பீய்ச்சி அடித்து தீயை அணைக்கும் முயற்சியில் ஈடுபட்டனர். ஆனால் தீ தொடர்ந்து கொளுந்துவிட்டு எரிந்ததால் பெரும் சிரமம் ஏற்பட்டது. நீண்ட நேர போராட்டத்திற்கு பின்பு ஒருவழியாக தீ முற்றிலும் அணைக்கப்பட்டது.

இருந்த போதும் கம்பெனியில் இருந்த பெயிண்ட், பீரோ, கட்டில், தளவாட பொருட்கள் என பல லட்சம் ரூபாய் மதிப்பிலான பொருட்கள் சேதமாகியது. தீ விபத்துக்கான காரணம் குறித்து சின்னாளபட்டி போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர். இச்சம்பவத்தால் அப்பகுதியில் மிகுந்த பரபரப்பு ஏற்பட்டது.

# இருதரப்பினரிடையே மோதலில் 5 பேர் படுகாயம் 4 பேர் கைது

அரூர், ஜன.20

தருமபுரி மாவட்டம் அரூர் அடுத்த கோட்டப்பட்டி அருகே உள்ள எஸ். தாதம்பட்டி கிராமத்தை சேர்ந்தவர் அச்சுதன் (வயது26). இவர் தனியார் கால்நடை மருத்துவராக பணியாற்றி வருகிறார்.

இந்தநிலையில் இவர் நேற்று முன்தினம் இரவு பாலகோட்டை எனும் கிராமத்தின் வழியாக தனது இருசக்கர வாகனத்தில் சென்றார். அங்கு நாய்க்குத்தி கிராமத்தைச் சேர்ந்த தீர்த்தகிரி மகன் பூபாலன் (34) மற்றும் அவரது நண்பர்கள் மது அருந்தி கொண்டிருந்துள்ளனர்

அவர்கள் அச்சுதனை பார்த்து எதற்காக வேகமாக செல்கிறாய் என திட்டியதாகவும் அப்போது இருவருக்கும் இடையே வாய் தகராறு ஏற்பட்டு கைகலப்பு ஏற்பட்டதாக கூறப்படுகிறது. அப்போது அருகில் இருந்தவர்கள் சமாதானம் செய்து இருவரையும் அனுப்பி வைத்துள்ளனர்.

பின்னர் நாய்க்குத்தி கிராமத்தை சேர்ந்த பூபாலன் தன்னுடைய நண்பர்கள் 20 பேருடன் இருசக்கர வாகனத்தில் ஆயுதங்களுடன் எஸ். தாதம்பட்டி கிராமத்திற்கு சென்று அங்கிருந்த பொதுமக்களை சரமாரியாக தாக்கியுள்ளனர். இதில் அச்சுதன் (26), தினேஷ் (25), வினோத் (27), ராகவன் (23) ஆகியோருக்கு காயம் ஏற்பட்டுள்ளது.

பின்னர் அந்த கிராமத்தினர் திருப்பி தாக்க முற்பட்டபோது வண்டிகளை அங்கேயே விட்டு விட்டு தப்பியோடியுள்ளனர்.

இதுகுறித்து அப்பகுதியினர் கோட்டப்பட்டி போலீஸ் நிலையத்தில் அளித்த புகாரின் பேரில் நாய்குத்தி கிராமத்தை சேர்ந்த பூபாலன், ரமேஷ் (24), ராஜ்குமார் (39), குமார் (41) ஆகியோரை போலீசார் கைது செய்தனர்.

இதைத்தொடர்ந்து இந்த சம்பவம் குறித்து தகவலறிந்த ஏ.டி.எஸ்.பி. பாலசுப்பிரமணியன், டி.எஸ்.பி. கரிகால்பாரிசங்கர் ஆகியோர் அங்கு விரைந்து நேரில் சென்று விசாரணை மேற்கொண்டனர். மீண்டும் அசம்பாவிதங்கள் நடைபெறாமல் இருக்க கோட்டப்பட்டி போலீஸ் இன்ஸ்பெக்டர் சரவணன் தலைமையில் ஏராளமான போலீசார் குவிக்கப்பட்டுள்ளனர்.

இந்த சம்பவம் அந்த பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# சென்னையில் நாய் கண்காட்சி



சென்னை, ஜன 20

சென்னையில் ஆண்டுதோறும் ஜனவரி மாதம் பொங்கல் பண்டிகை சமயத்தில் நாய் கண்காட்சி நடத்தப்பட்டு வருகிறது. இந்த கண்காட்சியில் தமிழகம் முழுவதும் இருந்து ஏராளமானோர் தாங்கள் வளர்க்கும் நாய்களுடன் வந்து கலந்து கொள்வார்கள்.

இந்த ஆண்டுக்கான நாய் கண்காட்சி இன்று (சனிக்கிழமை) சென்னை மயிலாப்பூர் லைட் அவுஸ் அருகில் உள்ள பெட்ஸ் பள்ளி கிரிக்கெட் மைதானத்தில் நடந்தது.

கண்காட்சியில் கீழ்படிதல் சோதனைகள் மற்றும் 2 சிறப்பு நிகழ்ச்சிகள் நாய்களுக்கு நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டு இருந்தது.

அதன்படி, பல்வேறு போட்டிகளில் நாய்கள் பங்கேற்றன.

செல்லப்பிராணிகளான நாய்கள் விதவிதமாக வந்தது பார்வையாளர்களை மிகவும் கவர்ந்தது. இன்று நாய்களுக்கான தனித் திறமைகள் மற்றும் அழகு போட்டியும் நடத்தப்பட்டது.

நாளை, அனைத்து வகை நாய்களுக்கான போட்டிகள் நடத்தப்படும். இறுதியில் பரிசளிப்பு விழா நடைபெறும்.

அமைச்சர்கள் தா.மோ. அன்பரசன், அன்பில் மகேஷ் பொய்யா மொழி கலந்து கொண்டு பரிசுகளை வழங்க உள்ளனர்.

# 'விமானத்தில் செல்ல வேண்டும்' விளையாட்டாக கேட்டதை நிறைவேற்றிய பள்ளி தலைமை ஆசிரியர்




மதுரை, ஜன.20

தென்காசி மாவட்டம் கீழப்பாவூர் ஒன்றியம் கொண்டலூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் 95 மாணவமாணவிகள் படித்து வருகின்றனர். இப்பள்ளியில் 5ம் வகுப்பு பயிலும் 20 மாணவர்களும், 5 ஆசிரியர்களும் 2 நாள் கல்வி சுற்றுலாவாக மதுரையில் இருந்து சென்னைக்கு விமானத்தில் பயணம் செய்தனர்.

பள்ளியில் கடந்த சில நாட்களுக்கு முன்பு "ரைட் பிரதர்ஸ்" பற்றி பாடம் நடத்திக் கொண்டிருந்தபோது, விமானத்தில் போக ஆசையாக இருப்பதாக தலைமை ஆசிரியரிடம் மாணவமாணவிகள் தெரிவித்தனர். இதையடுத்து தலைமை ஆசிரியர் மைக்கேல்ராஜ் விமானத்தில் அழைத்து செல்ல திட்டமிட்டார். இதற்காக அவரது துபாய் நண்பர்கள் மற்றும் ஊர் பொதுமக்கள், பெற்றோர்கள் உதவியுடன் நிதி திரட்டினார். இதைத்தொடர்ந்து 20 மாணவமாணவிகள், 5 ஆசிரியர்களுடன் இன்று காலை அவர்கள் மதுரையில் இருந்து சென்னைக்கு விமானத்தில் புறப்பட்டனர். விமானத்தில் முதன் முதலாக பயணம் மேற்கொள்ள இருந்த மாணவமாணவிகள் மகிழ்ச்சியுடன் காணப்பட்டனர்.

சென்னைக்கு செல்லும் அவர்கள் அங்கு பிர்லா கோளரங்கம், அறிஞர் அண்ணா நூற்றாண்டு நூலகம், எழும்பூர் அருங்காட்சியகம், சட்டமன்றம், தலைமைச் செயலகம், சென்னை உயர்நீதிமன்றம், வள்ளுவர் கோட்டம், தமிழக முன்னாள் முதல்வர்கள் அண்ணா, கருணாநிதி, எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா ஆகியோரின் நினைவிடங்கள், வண்டலூர் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா என பல இடங்களை சுற்றி பார்த்துவிட்டு நாளை (19ந் தேதி) ஞாயிறு இரவு பொதிகை ரெயிலில் தென்காசிக்கு திரும்புகிறார்கள்.

இதுகுறித்து கொண்டலூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளிதலைமை ஆசிரியர் மைக்கேல்ராஜ் கூறும்போது, இந்த விமானப் பயண வாய்ப்பு கிராமப்புற அரசு பள்ளி மாணவர்களுக்கு அதுவும் 5ம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு அவர்களது வாழ்வில் மறக்க முடியாத ஒரு வித்தியாசமான அனுபவத்தையும், புதிய உயரத்தையும் அளிக்கும்.

இம்மாதிரியான விமான பயணத்திற்கு அரசு பள்ளி மாணவர்களையும் அழைத்துச் செல்ல முடியும் என்பதற்கு உதாரணமாக அமைகிறது. இதற்காக ஒரு நபருக்கு ரூ.7 ஆயிரம் விமான டிக்கெட், 2 நாள் ரெயில் பயண டிக்கெட் மற்றும் இதர செலவுகள் என மொத்தம் ரூ. 1 லட்சத்து 91 ஆயிரம் செலவு செய்து உள்ளோம் என்றார்.

இதுகுறித்து 5ம் வகுப்பு படிக்கும் மாணவமாணவிகள் கூறுகையில், விளையாட்டாக தலைமை ஆசிரியரிடம் கூறினோம். உண்மையிலேயே அழைத்துச்செல்வதாக கூறியவுடன் ரொம்ப சந்தோசமாக இருந்தது. முதல் முறையாக விமானத்தில் பயணித்தது மகிழ்ச்சியாக இருந்தது என்றனர்.

# சென்னையில் அதிர்ச்சியை ஏற்படுத்திய சம்பவம்: பாலியல் தொழிலில் தள்ளப்பட்ட 6 மாணவிகளுக்கு கவுன்சிலிங்

சென்னை, ஜன.20

சென்னையில் பண ஆசையில் பெற்ற மகளையே பெற்றோர் பாலியல் தொழிலில் ஈடுபடுத்தி அதை வீடியோ எடுத்த விவகாரம் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

மயிலாப்பூர் அனைத்து மகளிர் போலீஸ் நிலையத்துக்கு வந்த ஒரு புகாரில் சிறுமிகளை ஆபாச வீடியோக்கள் எடுத்து ஒரு கும்பல் பணத்துக்காக சமூக வலைதளங்களில் விற்பதாக குறிப்பிடப்பட்டு இருந்தது. இது தொடர்பாக போலீசார் அதிரடி விசாரணையில் இறங்கினார்கள்.

சந்தேகத்தின் பேரில் ஒருவரை பிடித்து போலீசார் தங்கள் விசாரணை வளையத்துக்குள் கொண்டு வந்தனர். அப்போது தன்னுடைய மனைவி மூலம் மகளையே பணம் சம்பாதிப்பதற்காக பாலியல் தொழிலில் ஈடுபடுத்தியதோடு அதை ரகசியமாக வீடியோ எடுத்து வந்த திடுக்கிடும் தகவலை தெரிவித்தனர்.

இதையடுத்து போலீசார் அந்த சிறுமியின் பெற்றோரை போக்சோ வழக்கில் கைது செய்தனர்.

சிறுமியின் தந்தை செல்போனை கைப்பற்றி ஆய்வு செய்த போது அந்த சிறுமி மட்டுமல்லாது அவரது பள்ளி தோழிகள் 6 பேரையும் உல்லாசத்துக்கு தள்ளியது தெரியவந்தது. சிறுமிகளை மிரட்டி உல்லாசமாக இருந்ததாக வீடியோவில் இடம்பெற்று இருந்த பட்டினப்பாக்கம் மற்றும் தாம்பரத்தை சேர்ந்த 2 பேரை போலீசார் அடையாளம் கண்டு கைது செய்தனர். அவர்கள் போலீசாரிடம் சிறுமியின் ஆபாச புகைப்படங்களை வாட்ஸ்அப் மூலம் விற்றதை தெரிவித்தனர். இவர்கள் 6 மாணவிகளை தவிர மற்ற சிறுமிகளிடமும் இதே போன்ற செயலில் ஈடுபட்டார்களா? என்பது தொடர்பாகவும் விசாரணை நடந்து வருகிறது.

போலீசார் சீரழிக்கப்பட்ட 6 மாணவிகளின் வீடியோக்களை கைப்பற்றி ஆய்வு மேற்கொண்டனர். அந்த மாணவிகளை வீடியோ காட்சி மூலம் அடையாளம் கண்ட போலீசார் அவர்களிடம் ரகசியமாக விசாரணை நடத்தினார்கள். அவர்கள் தாங்கள் மிரட்டப்பட்டு பாலியல் தொழிலில் ஈடுபடுத்தப்பட்டதாக கண்ணீர் மல்க தெரிவித்தனர். அந்த மாணவிகள் இன்னும் அதிர்ச்சியின் பிடியில் இருந்து மீளாமல் இருந்து வருகின்றனர்.

இதை உணர்ந்த போலீசார் அந்த மாணவிகளுக்கு மனரீதியாக தைரியம் கொடுக்கும் வகையில் கவுன்சிலிங் கொடுத்தனர். இதன் மூலம் அந்த மாணவிகளுக்கு கொஞ்சம் அச்ச உணர்வு மீண்டு இருப்பதாக போலீசார் தெரிவித்தனர்.

மனைவியுடன் கைதானவர் தனது மகளின் தோழிகளை மிரட்டியே ஆபாச வீடியோ எடுத்ததாக கூறப்படுகிறது. மேலும் இதே போல பலரையும் அவர் ஆபாச வீடியோ எடுத்து இருக்கலாம் என்ற சந்தேகம் போலீசாருக்கு ஏற்பட்டு உள்ளது. இதற்காக வேறு ஒரு செல்போன் எதையும் அவர் பயன்படுத்தினாரா? என்ற கோணத்திலும் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர். கைதான சிறுமியின் பெற்றோரை காவலில் எடுத்து விசாரிக்க போலீசார் திட்டமிட்டு உள்ளனர். தற்போது பொங்கல் தொடர் விடுமுறை என்பதால் திங்கள் அல்லது செவ்வாய்க்கிழமை போலீசார் கோர்ட்டில் மனு தாக்கல் செய்ய இருக்கின்றனர். அவர்களை காவலில் எடுத்து விசாரிக்கும் போது இந்த பாலியல் விவகாரத்தில் திடுக்கிடும் தகவல்கள் வெளியாகலாம் என தெரிகிறது.

இது தொடர்பாக உயர் போலீஸ் அதிகாரி ஒருவர் கூறியதாவது:

இந்த பாலியல் வழக்கை நாங்கள் அண்ணா பல்கலைக்கழக மாணவிக்கு நடந்த பாலியல் வழக்கு போலத்தான் பார்க்கிறோம். அதனால் இந்த வழக்கில் தீவிரமாக விசாரணை நடத்தி 60 நாட்களுக்குள் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்ய இருக்கிறோம். சிறப்பு நீதிமன்றத்தில் விசாரணை நடத்தி குற்றவாளிகளுக்கு அதிகபட்ச தண்டனை வாங்கி கொடுப்போம்.

இவ்வாறு அவர் கூறினார்.

தமிழ்நாட்டில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான தி.மு.க. அரசு பொறுப்பேற்ற பிறகு 80 சதவீத வழக்குகளில் 60 நாட்களுக்குள் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டு உள்ளது.

# கடற்கரை பகுதியில் தொடர்ந்து கரை ஒதுங்கும் ஆமைகள்

மாமல்லபுரம், ஜன.20


சென்னை சுற்றுவட்டார கடற்கரை பகுதிகளில் கடந்த சில நாட்களாக ஆமைகள் இறந்து கரை ஒதுங்கி வருகிறது. இது வன ஆர்வலர்கள் மற்றும் பொது மக்களிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தி வருகிறது. அழுகிய நிலையில் கரை ஒதுங்கும் ஆமைகளால், சுற்றுச்சூழல் சீர்கேடும் அடைந்து வருகிறது. இதுவரை 200க்கும் மேற்பட்ட ஆமைகள் கரை ஒதுங்கியதாக கூறப்படுகிறது.

இந்த நிலையில் நேற்றும், இன்றும் மாமல்லபுரம் சுற்றுவட்டார கடலோர மீனவர் கிராமங்களான நெம்மேலி, தேவநேரி, பட்டிபுலம், வெண்புருஷம், கொக்கிலமேடு உள்ளிட்ட கடலோரத்தில் 20க்கும் மேற்பட்ட ஆமைகள் ஆங்காங்கே செத்து கரை ஒதுங்கி கிடக்கிறது. இதை அப்பகுதி மீனவர்கள் அப்புறப்படுத்தி வருகின்றனர். இது குறித்து மீன்வளத்துறை அதிகாரிகள் கூறியதாவது:

கிழக்கு கடற்கரை சாலை கடலோர பகுதியில், அதிகளவில் ஆமைகள் இறந்து கரை ஒதுங்குவதாக தகவல்கள் வந்துள்ளது. இது குறித்து அரசுக்கு தெரிவித்துள்ளோம். கடற்கரை பகுதிகளுக்கு முட்டையிட வரும் ஆமைகளுக்கு இயற்கை சூழலில் நெருக்கடி ஏற்படுவதால், அது தன் போக்கை மாற்றி மாற்று இடங்களுக்கு செல்லும் போது, கனவா வலைகள் (டிரால் நெட்) வலைகளில் அடிபட்டு மூச்சுவிட முடியாமல் இறந்தும் கரை ஒதுங்குவதாக தெரிய வந்துள்ளது. மேலும் இதுகுறித்து விசாரணை நடத்தி வருகிறோம். வரும் 22ந் தேதி மீன்வளத்துறை சார்பில், இது தொடர்பாக மீனவர்களுக்கு விழிப்புணர்வு கூட்டம் நடைபெற உள்ளது.

இறந்து கரை ஒதுங்கிய ஆமைகளை, வனத்துறையினர் மற்றும் தன்னார்வலர்கள் உதவியுடன் கடற்கரை பகுதிகளில் புதைத்து வருகிறோம். இவ்வாறு அவர்கள் கூறினர்.

# குடியரசு தின அணிவகுப்பு ஒத்திகை: காமராஜர் சாலையில் போக்குவரத்து மாற்றம்



சென்னை, ஜன.20

சென்னை போக்குவரத்து காவல்துறை சார்பில் வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

நமது குடியரசுதினவிழா கொண்டாட்டம் வருகிற 26.01.2025ம் தேதி காமராஜர் சாலையில் உழைப்பாளர் சிலை அருகில் கொண்டாடபபட இருக்கிறது, இதனை முன்னிட்டு ஜனவரி 26 மற்றும் ஒத்திகை நாட்களான ஜனவரி 20, 22 மற்றும் 24 ம் தேதி ஆகிய மேற்கண்ட 4 தினங்களுக்கு கீழ்கண்ட போக்குவரத்து ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

1) மேற்கண்ட தினங்களில் காமராஜர் சாலையில், காந்தி சிலை முதல் போர் நினைவுச் சின்னம் வரை காலை 6 மணி முதல் நிகழ்ச்சி முடியும் வரை வாகனங்கள் அனுமதிக்கப்பட மாட்டாது.

2) அடையாறு பகுதியிலிருந்து காமராஜர் சாலையில் பிராட்வே நோக்கி செல்லும் சரக்கு மற்றும் வணிக வாகனங்கள் கிரின்வேஸ் சாலை சந்திப்பிலிருந்து ஆர்.கே. மடம் சாலை, திருவேங்கடம் சாலை, தேவநாதன் சாலை, செயின்ட் மேரிஸ் சாலை, ராமகிருஷ்ணா மடம் சாலை, வெங்கடேச அக்ரகாரம் தெரு. ரங்கா ரோடு, கிழக்கு அபிராமபுரம் முதல் தெரு.லஸ் அவென்யூ அமிர்தான்சன் சந்திப்பு, பி.எஸ். சிவசாமி சாலை, ராதாகிருஷ்ணன் சாலை, மியூசிக் அகாடமி. டி.டி.கே. சாலை. கொளடியா மட் ரோடு ராயபேட்டை மருத்துவமனை, இராயப்பேட்டை மணிக்கூண்டு, ஜெனரல் பேட்டர்ஸ் ரோடு, அண்ணாசாலை வழியாக பிராட்வே சென்றடையலாம்.

3) அடையாறு பகுதியிலிருந்து காமராஜர் சாலையில் பிராட்வே நோக்கி செல்லும் பிற வாகனங்கள், (மாநகர பஸ்கள் உட்பட) காந்திசிலை சந்திப்பில் ராதாகிருஷ்ணன் சாலை நோக்கி திருப்பபட்டு ராயபேட்டை 1 பாயீண்ட், நீல் கிரீஸ், மியூசிக் அகாடமி. டி.டி.கே. சாலை, கொளடியா மட் ரோடு, ராயபேட்டை மருத்துவமனை, ராயப்பேட்டை மணிக்கூண்டு, ஜெனரல் பேட்டர்ஸ் ரோடு, அண்ணாசாலை வழியாக பிராட்வே சென்றடையலாம்.

4) மயிலாப்பூர் பகுதியிலிருந்து வரும் அனைத்து வாகனங்களும் ராயப்பேட்டை நெடுஞ்சாலை வந்து ராயபேட்டை 1 பாயீண்ட்டில், இதர வாகனங்கள்இடதுபுறமாகவோ (அ) வலதுபுறமாகவோ திரும்பி தங்களின் இலக்கை அடையலாம். மாநகர பஸ்கள் இடதுபுறமாக திரும்பி டாக்டர் ராதாகிருஷ்ணன் சாலை. நீல்கிரீஸ், மியூசிக் அகாடமி, டி.டி. கே. சாலை,கொளடியா மடம் சாலை, ராயப்பேட்டை நெடுஞ்சாலை, ராயப்பேட்டை மணிக்கூண்டுவழியாகபிராட்வே சென்றடையலாம்.

5) டாக்டர் நடேசன் சாலை மற்றும் அவ்வை சண்முகம் சாலை சந்திப்பு வழியாக காமராஜர் சாலை நோக்கி வரும் வாகனங்கள் ஐஸ் அவுஸ் சந்திப்பு நோக்கி திருப்பி விடப்படும்.

6) டாக்டர். பெசன்ட் சாலையிலிருந்து காமராஜர் சாலை நோக்கி வரும் வாகனங்கள் பெசன்ட் சாலை ரவுண்டானாவில் ஐஸ் அவுஸ் நோக்கி திருப்பி விடப்படும்.

7) காமராஜர் சாலை நோக்கி வரும் வாகனங்கள் பாரதிசாலை மற்றும் பெல்ஸ் ரோடு சந்திப்பில் பெல்ஸ் ரோடு நோக்கி திருப்பி விடப்படும்.

8) வாலாஜாசாலை மற்றும் பெல்ஸ் ரோடு சந்திப்பில் உழைப்பாளர் சிலை நோக்கி வரும் வாகனங்கள் பெல்ஸ் ரோடு வழியாக திருப்பி விடப்படும்.

9) அண்ணாசதுக்கம் அருகில் உள்ள பேருந்து நிறுத்தம் தற்காலிகமாக சிந்தாதிரிப்பேட்டை ரெயில் நிலையம் அருகில் மாற்றப்படும்.

10) பாரிமுனையிலிருந்து ராஜாஜி சாலை மற்றும் காமராஜர் சாலை வழியாக அடையாறு நோக்கி செல்லும் அனைத்து வாகனங்களும் ரிசர்வ் வங்கி சுரங்கபாதையில் செல்லாமல் வடக்கு துறைமுக சாலை வழியாக ராஜா அண்ணாமலை மன்றம், வாலாஜா பாயிண்ட், அண்ணாசாலை, அண்ணா சிலை, ஜீ.பி.ரோடு, ராயபேட்டை மணி கூண்டு, வெஸ்ட் காட் சாலை, ஜீ.ஆர்.எச்., அஜந்தா சந்திப்பு இடதுபுறம் திரும்பி லாயிட்ஸ் சாலை (வி.பி. ராமன் சாலை), ஐஸ்டிஸ் ஜம்புலிங்கம் தெரு இடதுபுறம் (அ) வலதுபுறம் திரும்பி டாக்டர்.ராதாகிருஷ்ணன் சாலை வழியாக தங்கள் இலக்கை சென்றடையலாம்.

11) அண்ணாசாலை மற்றும் கொடிமர இல்ல சாலை (வாலாஜா பாய்ண்ட்) சந்திப்பிலிருந்து போர் நினைவுச் சின்னம் நோக்கி வாகனங்கள் செல்ல அனுமதியில்லை.

வாகன ஓட்டிகள் ஒத்துழைப்பு நல்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வி.சி.க. நிர்வாகி கொலை கைதான டிரைவர் மாவுக்கட்டுடன் அரசு ஆஸ்பத்திரியில் அனுமதி



தாடிக்கொம்பு, ஜன.20

திண்டுக்கல் அருகே உள்ள கிழக்கு மீனாட்சி நாயக்கன்பட்டியை சேர்ந்தவர் அகரமுத்து (வயது 38). விடுதலை சிறுத்தைகள் கட்சியின் முகாம் பொறுப்பாளரான இவர் பழனி சாலையில் உள்ள மர அறுவை மில்லில் வேலை பார்த்து வந்தார். இவருக்கு திருமணமாகி மனைவி மற்றும் குழந்தைகள் உள்ளனர். அதே பகுதியை சேர்ந்தவர் அங்குச்சாமி (35). கார் டிரைவரான இவருக்கும், அகரமுத்துவுக்கும் இடையே முன்விரோதம் இருந்து வந்துள்ளது.

நேற்று முன்தினம் அப்பகுதியில் நடந்த பொங்கல் விழாவில் இவர்களுக்கிடையே மீண்டும் மோதல் ஏற்பட்டது. இதில் ஆத்திரமடைந்த அங்குச்சாமி குடிபோதையில் அகரமுத்துவை குத்தி கொலை செய்தார். இதை தடுக்க வந்த அவரது அண்ணன் ஜெய்கணேசுக்கும் காயம் ஏற்பட்டது.

இது தொடர்பாக தாடிக்கொம்பு போலீசாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. போலீசார்சம்பவ இடத்திற்கு வந்து அகரமுத்து உடலை மீட்டு திண்டுக்கல் அரசு ஆஸ்பத்திரியில் பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர்.

கொலை தொடர்பாக அங்குச்சாமி மற்றும் முத்தழகுபட்டியை சேர்ந்த செல்வம் மகன் ஷியாம் (19) ஆகிய 2 பேரை கைது செய்தனர். கொலைக்கு பயன்படுத்திய ஆயுதங்களை கைப்பற்ற போலீசார் அங்குச்சாமியை அழைத்துச் சென்றனர். அப்போது போலீசாரின் பிடியிலிருந்து தப்ப முயன்றதால் அங்குச்சாமி தவறி விழுந்தார். இதில் அவருக்கு கால்முறிவு ஏற்பட்டது. இதனையடுத்து மாவுக்கட்டுடன் திண்டுக்கல் அரசு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

# நெல்லையில் மனைவியை சரமாரியாக வெட்டிக்கொன்ற கணவர்

நெல்லை, ஜன.20

நெல்லை மாவட்டம் முன்னீர்பள்ளம் கிராமம் நயினார்குளம் களத்து மேட்டு தெருவை சேர்ந்தவர் பலவேசம் (வயது 34). இவர் பெயிண்டராக வேலை பார்த்து வருகிறார். இவரது மனைவி தமிழரசி (30). இவர்களுக்கு 2 மகன்கள் உள்ளனர். பலவேசம் அடிக்கடி தனது மனைவி தமிழரசியுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டு வந்துள்ளார். சமீபகாலமாக தமிழரசியின் நடத்தையில் சந்தேகப்பட்டு பிரச்சனை செய்து வந்ததாக கூறப்படுகிறது.

இந்நிலையில் நேற்று இரவு பலவேசம் தனது மனைவி மற்றும் குழந்தைகளுடன் தூங்கினார். இன்று அதிகாலை 4 மணி அளவில் கணவன்மனைவி இடையே மீண்டும் பிரச்சனை ஏற்பட்டுள்ளது. அவர்களுக்குள் வாக்குவாதம் முற்றியதில் ஆத்திரம் அடைந்த பலவேசம், சமையல் அறையில் இருந்த அரிவாளை எடுத்து வந்து தமிழரசியை சரமாரியாக வெட்டினார்.

இதில் பலத்த வெட்டுக் காயம் அடைந்த தமிழரசி ரத்த வெள்ளத்தில் சரிந்து விழுந்து சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். பின்னர் பலவேசம் அங்கிருந்து முன்னீர்பள்ளம் போலீஸ் நிலையத்திற்கு சென்று தனது மனைவியை வெட்டிக்கொலை செய்து விட்டதாக தெரிவித்து சரண் அடைந்தார்.

உடனே போலீசார் நயினார் குளத்திற்கு சென்று ரத்த வெள்ளத்தில் கொலை செய்யப்பட்டு கிடந்த தமிழரசி உடலை மீட்டு நெல்லை அரசு மருத்துவமனைக்கு பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைத்தனர். மேலும் இதுதொடர்பாக இன்ஸ்பெக்டர் சுரேஷ் வழக்குப்பதிவு செய்து பலவேசத்தை கைது செய்தனர்.

# குன்னூர் அருகே மலைப்பாதையில் சுற்றிய காட்டு யானைகள் கூட்டம்



குன்னூர், ஜன.20

குன்னூர் மேட்டுப்பாளையம் தேசிய நெடுஞ்சாலையில் சமவெளி பகுதிகளில் இருந்து வனவிலங்குகள் உணவு மற்றும் தண்ணீர் தேடி மலை மாவட்டத்திற்கு இடம் பெயர்ந்து வருகிறது.

இதனால் வனவிலங்குகள் சாலை மற்றும் குடியிருப்பு பகுதிகளில் சுற்றி திரிகின்றன. குறிப்பாக காட்டு யானைகள் தனித்தனி குழுவாக சுற்றி திரிகிறது.

இந்த நிலையில் நேற்றிரவு காட்டேரி பூங்கா பகுதியில் 5 காட்டு யானைகள் வனத்தை விட்டு வெளியேறி குன்னூர்மேட்டுப்பாளையம் மலைப்பாதைக்கு வந்தது.

யானைகள் சாலையில் அங்குமிங்கும் நடமாடியது. இதனால் அந்த வழியாக வந்த வாகன ஓட்டிகள் அச்சம் அடைந்தனர். தங்கள் வாகனங்களை சிறிது தொலைவிலேயே நிறுத்திவிட்டு, யானையை பார்த்தனர்.

மேலும் யானை பார்த்ததால் காரில் இருந்தவர்கள் அதிர்ச்சியாக சத்தம் போட்டனர். ஆனால் யானைகள் அங்கிருந்து நகரவே வில்லை.

தகவல் அறிந்ததும் வனத்துறையினர் விரைந்து வந்து சாலையில் சுற்றிய யானையை விரட்டும் பணியில் ஈடுபட்டனர். ஒரு மணி நேரத்திற்கு பிறகு யானைகள் அங்கிருந்து வனத்திற்குள் சென்றது. அதன்பின்னரே வாகன ஓட்டிகள் நிம்மதி அடைந்து தங்களது வாகனங்களை இயக்கி சென்றனர்.

யானைகள் நடமாட்டம் அடிக்கடி இருப்பதால் வாகன ஓட்டிகள் அச்சத்துடனேயே இந்த சாலையை கடந்து வருகின்றனர். இந்த நிலையில் இப்பகுதியில் யானைகள் நடமாட்டம் அதிகரித்து வருவதால் சுற்றுலா பயணிகள் எக்காரணத்தைக் கொண்டும் அதை புகைப்படம் எடுக்கக் கூடாது. தொந்தரவு செய்யக்கூடாது என வனத்துறையினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

மேலும் பொங்கல் விடுமுறையை முன்னிட்டு சுற்றுலா பயணிகள் அதிக அளவில் மலைப்பாதையில் பயணிப்பதால் வன விலங்குகளை அவர்கள் இடையூறு செய்யாத வகையில் வன ஊழியர்கள் தீவிர கண்காணிப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக குன்னூர் வனசரகர் ரவீந்திரநாத் தெரிவித்துள்ளார்.

# அரசின் கடன் அதிகரித்திருப்பது தான் திமுக அரசின் சாதனை: எடப்பாடி பழனிசாமி தாக்கு



சென்னை, ஜன.20

சென்னையில் நடைபெற்ற எம்.ஜி.ஆரின் 108 வது பிறந்தநாள் விழாவில் அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி கலந்து கொண்டார். அப்போது அவர் பேசியதாவது:

எம்.ஜி.ஆர். பெயரை உச்சரிக்காமல் தமிழகத்தில் யாராலும் ஆட்சி நடத்த முடியாது.

எம்.ஜி.ஆர், ஜெயலலிதாவுக்கு வாரிசுகள் இல்லை. நாம்தாம் வாரிசு.

நான் என்ன மிட்டா மிராசா, தொழிலதிபரா? சாதாரண தொண்டன்.

கட்சிக்கு உழைத்து, விஸ்வாசமா இருந்தா கதவ தட்டி பதவி கொடுக்குற கட்சிதான் அ.தி.மு.க.

சட்டசபை தேர்தலில் 522 அறிவிப்பை வெளியிட்ட தி.மு.க. அரசு, அதில் 20 சதவீத அறிவிப்பை கூட நிறைவேற்றவில்லை.

ரேஷன் கடையில் தற்போது பொருள் கிடைப்பதில்லை. திருநெல்வேலி அல்வா கொடுக்கிறார்கள்.

மகனை துணை முதலமைச்சர் ஆக்கியதுதான் தி.மு.க. அரசின் சாதனை.

மகளிர் உரிமைத் தொகையை தி.மு.க. தரவில்லை.நாங்கள்வாதாடி, போராடி பெற்றுத் தந்தோம். ஆட்சிக்கு வந்து 28 மாதங்கள் கழித்துதான் மகளிர் உரிமைத் தொகை தரப்பட்டது.

வர்தா புயல் மாதிரி ஒரு புயல் வந்தா போதும்... புயலோடு புயலா போயிடும். தி.மு.க. ஆட்சிக்கு இன்னும் 13 அமாவாசைதான் இருக்கிறது.

மின்சார கட்டணம், வீட்டு வரி, தொழிற்சாலை வரி, தொழில் வரி உயர்ந்துள்ளது.

மக்கள் மீது வரி மேல் வரி போடும் ஆட்சிதான்ஸ்டாலின் அரசு.

இந்தியாவில் அதிக கடன் வாங்கிய மாநிலங்களில் தமிழகம் முதலிடம் வகிக்கிறது. அந்த சாதனையைதான் ஸ்டாலின் படைத்துள்ளார் என தெரிவித்தார்.

# சில்லரை மட்டும் இருந்ததால் கோவில் உண்டியலை புதரில் வீசிச்சென்ற கொள்ளையர்கள்



பல்லடம், ஜன.20

திருப்பூர் மாவட்டம் பல்லடம் ராயர்பாளையம் பகுதியில் விநாயகர் மற்றும் ஆஞ்சநேயர் கோவில்கள் உள்ளன. சம்பவத்தன்று இரவு இங்குள்ள செல்வ விநாயகர் கோவிலுக்குள் புகுந்த கொள்ளையர்கள் உண்டியலை திருடிச் சென்றுள்ளனர். அதில் பணம் இல்லாமல் சில்லரை காசுகள் மட்டுமே இருந்ததால் உண்டியலை அருகில் உள்ள புதரில் வீசி சென்றுள்ளனர்.

இது குறித்து அப்பகுதி பொதுமக்கள் கூறுகையில்,

கடந்த சில மாதங்களில் இப்பகுதியில் ஏராளமான திருட்டு மற்றும் திருட்டு முயற்சி சம்பவங்கள் நடந்துள்ளன. தற்போது பொங்கல் பண்டிகையை முன்னிட்டு தொடர் விடுமுறை என்பதால் பெரும்பாலானோர் சொந்த ஊர் மற்றும் வெளியூர் சென்றுள்ளனர்.

இதனை சாதகமாக பயன்படுத்திய திருட்டு ஆசாமிகள் தங்களது கைவரிசையை காட்ட முயன்றுள்ளனர். முதலில் இங்குள்ள காட்டு பெருமாள் கோவிலில் பூட்டை உடைக்க முயன்றனர். முடியாததால் அருகில் உள்ள செல்வ விநாயகர் கோவில் உண்டியலை உடைத்துள்ளனர்.

சமீபத்தில்தான் இக்கோவில் உண்டியல் பணம் வங்கி கணக்கில் செலுத்தப்பட்டது. இதனால், சில்லரை காசுகள் மட்டுமே இருந்த நிலையில் ஏமாற்றம் அடைந்த திருடர்கள் உண்டியலை காட்டுக்குள் வீசி சென்றனர். அதன்பின் கோவில் அருகில் உள்ள வீட்டின் கதவை உடைக்க முயன்று அதுவும் தோல்வியடைந்ததால், திரும்பிச் சென்றுள்ளனர்.

வீடுகள் அதிகமுள்ள இப்பகுதியில் அடிக்கடி திருட்டு சம்பவங்கள் நடந்து வருவது எங்களுக்கு அச்சுறுத்தலாக உள்ளது. எனவே போலீசார் கூடுதல் ரோந்து மேற்கொண்டு திருட்டு ஆசாமிகளை கைது செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு அவர்கள் கூறினர்.

# தாமிரபரணி ஆற்றில் மூழ்கி பலியான மேலும் ஒரு சிறுமி உடல் மீட்பு



நெல்லை, ஜன.20

தூத்துக்குடி மேல சண்முகபுரம் பகுதியை சேர்ந்தவர் நாகஅர்ச்சுனன். மாப்பிள்ளையூரணி கே.வி. கே.சாமி நகரை சேர்ந்தவர் அய்யப்பன். நண்பர்களான இவர்கள் 2 பேரும், தங்களது குடும்பத்தினருடன் காணும் பொங்கலை கொண்டாடும் விதமாக, நெல்லை மாவட்டம் முக்கூடல் அருகே உள்ள வேளார்குளத்தில் உள்ள தங்களதுநண்பர்வீட்டுக்கு நேற்று வந்தனர்.

பின்னர் அவர்கள் தங்களது குடும்பத்தினருடன் முக்கூடல் தாமிரபரணி ஆற்றில் குளிக்க சென்றனர். முத்துமாலையம்மன் கோவில் அருகே ஆற்றில் 3 பேர் குடும்பத்தையும் சேர்ந்த சுமார் 15 பேரும் குளித்துக் கொண்டிருந்தனர். அப்போது அதில் சிறுமிகள் உள்பட 6 பேர் ஆழமான பகுதிக்கு சென்றுவிட்டதாக கூறப்படுகிறது. உடனே அங்கிருந்தவர்களும், அவர்களது உறவினர்களும் அவர்களை காப்பாற்ற முயன்ற நிலையில் 4 பேரை மீட்டனர்.

இதில் நாகஅர்ச்சுனன் மகள் வைஷ்ணவி (வயது 13), அய்யப்பன் மகள் மாரி அனுஷியா (16) ஆகிய 2 பேரையும் காணவில்லை. அவர்கள் ஆழமானபகுதியில்மூழ்கினர். இதுகுறித்து உடனடியாக முக்கூடல் மற்றும் வீரவநல்லூர் போலீசாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. வீரவநல்லூர் போலீசார் விரைந்து வந்தனர்.

மேலும் சேரன்மகாதேவி மற்றும் அம்பை தீயணைப்பு நிலையத்திற்கும் தகவல் தெரிவிக்கப்பட்டு அவர்களும் விரைந்து வந்தனர்.

மாயமான 2 சிறுமிகளையும் ஆற்றுக்குள் இறங்கி தேடும் பணியில் சுமார் 10க்கும் மேற்பட்ட தீயணைப்பு வீரர்கள் ஈடுபட்டனர். இந்த நிலையில் பல மணி நேர தேடுதலுக்கு பின்னர் வைஷ்ணவி பிணமாக மீட்கப்பட்டாள். தொடர்ந்து மாரி அனுஷியாவை தேடி பார்த்தனர். ஆனால் இரவு வரை தேடியும் அவரை கண்டுபிடிக்க முடியவில்லை.

இதனால் போதிய வெளிச்சம் இன்மை காரணமாக தேடும் பணி நிறுத்தப்பட்டது. இன்று அதிகாலை முதல், மாயமான மாரி அனுஷியாவை தேடும் பணியில் 2வது நாளாக தீயணைப்பு வீரர்கள் ஈடுபட்டனர்.

அப்போது மாரி அனுஷியா மூழ்கிய இடத்தில் இருந்து சிறிது தூரத்தில் சடலமாக மிதந்தது கண்டு பிடிக்கப்பட்டது. இதைத்தொடர்ந்து தீயணைப்பு வீரர்கள் அவரது உடலை மீட்டனர்.

சிறுமியின் உடலை பார்த்து அவரது குடும்பத்தினர் கதறி துடித்தது அங்கிருந்தவர்களை கண் கலங்க செய்தது.

# திண்டிவனத்தில் அமையவுள்ள டாபர் தொழிற்சாலைக்கு சுற்றுச்சூழல் அனுமதி




திண்டிவனம், ஜன.20

திண்டிவனம் சிப்காட் உணவுப் பூங்காவில் அமைய உள்ள டாபர் நிறுவனத்தின் தொழிற்சாலைக்கு சுற்றுச்சூழல் அனுமதி வழங்கி தமிழ்நாடு சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

முன்னதாக தொழிற்சாலை கட்டுமான பணிகளை மேற்கொள்ள சுற்றுச்சூழல் அனுமதி கோரி டாபர் நிறுவனம் விண்ணப்பித்திருந்தது.

வீட்டு பராமரிப்பு, தனிப்பட்ட பராமரிப்பு மற்றும் பழச்சாறு உள்ளிட்ட பொருட்களை உற்பத்தி செய்து வரும் டாபர் இந்தியா லிமிடெட் நிறுவனம், விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம், சிப்காட் உணவுப் பூங்காவில் ரூ.400 கோடி முதலீட்டில் உற்பத்தி ஆலையைத் தொடங்க உள்ளது.

250நபர்களுக்குவேலை வாய்ப்பு அளிக்கும் இந்த உலகத் தரம் வாய்ந்த உற்பத்தி ஆலையை நிறுவவுவதற்கு முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில், தமிழக அரசுடன்புரிந்துணர்வு ஒப்பந்தம் கடந்த ஆண்டு மேற்கொளப்பட்டிருந்தது.

1,36,585 சதுர அடி பரப்பளவில் அமைய உள்ள இந்த தொழிற்சாலையில் தேன், ஓடோடெல், டாபர் ரெட், ரோஸ் வாட்டர் உள்ளிட் பொருட்களை தயாரிக்க டாபர் நிறுவனம் திட்டமிட்டுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

# பொதுவாழ்வில் இருப்பவர்கள் சனாதனத்தை விமர்சிப்பது கண்டிக்கத்தக்கது மன்னார்குடி ஜீயர்



மன்னார்குடி, ஜன.20

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடியில் செண்டலங்காரசெண்பகமன்னார் ராமானுஜ ஜீயர் நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது:

கடந்த சில நாட்களுக்கு முன்பு கிறிஸ்தவ நிகழ்ச்சியில் பங்கேற்றதுணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், நான் கிறிஸ்தவனாக இருப்பது பற்றி பெருமைப்படுவதாக தெரிவித்தார். இது முற்றிலும் தவறானபோக்கு மற்றும் கண்டிக்கத்தக்கது.

பொதுவாழ்வில் இருப்பவர்கள் ஒரு மதத்தை சார்ந்தவர்களாக இருந்து கொண்டு மற்றொரு மதத்தைவிமர்சிப்பதும், குறிப்பாக இந்து மதம் நம்புகின்ற சனாதனத்தை விமர்சிப்பதும் கண்டிக்கத்தக்கது. சனாதனத்தை கண்டிப்பதற்காகவே தன்னை கிறிஸ்தவன் என்று துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கூறிக் கொள்வது போன்று தெரிகிறது. அமைச்சர்கள் எந்த மதமாக இருந்தாலும் அவர்கள் பொதுவானவர்கள் என்பதை உணர்ந்து, தங்களது கருத்துக்களை தெரிவிக்க வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

# தடையை மீறி ஆடு, கோழியுடன் திருப்பரங்குன்றம் மலையேற முயன்ற இஸ்லாமியர்கள் தடுத்து நிறுத்தம்

மதுரை, ஜன.20

மதுரையில் திருப்பரங்குன்றம் மலை மதநல்லிணத்திற்கு எடுத்துக் காட்டாக திகழ்ந்து வருகிறது. மலைக்கு கீழ் சுப்பிரமணிய சுவாமி கோவிலும், மலை மீது சிக்கந்தர் பள்ளிவாசல் தர்காவும் இருக்கிறது. இந்த நிலையில், ஆடு, கோழியுடன் திருப்பரங்குன்றம் மலை மீது இஸ்லாமியர்கள் ஏற முயன்றனர்.



மதுரை திருப்பரங்குன்றம் மலை மீது உள்ள சிக்கந்தர் பாதுஷா தர்கா பள்ளிவாசலுக்கு ஆடு மற்றும் கோழிகளை எடுத்து சென்று பலியிட அனுமதியில்லை என ஏற்கனவே காவல்துறையினர் தெரிவித்து இருந்தனர். சுப்பிரமணிய சுவாமி திருக்கோவில் அமைந்துள்ள திருப்பரங்குன்றம் மலை மீது ஆடு, கோழி அறுக்க இந்து அமைப்பினரும் எதிர்ப்பு தெரிவித்தனர். இந்த நிலையில், ஆடு, கோழியுடன் தடையைமீறிதிருப்பரங்குன்றம் மலை மீதுஏற முயன்ற பள்ளிவாசல் ஜமாத்தை சேர்ந்தவர்களை போலீசார் தடுத்து நிறுத்தியதால் பரபரப்பு ஏற்பட்டது. இதனால் இஸ்லாமியர்கள் போலீசார் இடையே தள்ளுமுள்ளு ஏற்பட்டது.

மலை மீது உள்ள தர்காவில் வழிபாடு நடத்த மட்டுமே போலீசார் அனுமதி அளித்துள்ளனர்.

# தண்டவாளத்தில் கிடந்த இரும்பு பொருள்; ரெயிலை கவிழ்க்க சதியா? கரூரில் பரபரப்பு

கரூர், ஜன.20

கோவையில் இருந்து நாகர்கோவில் வரை செல்லும் எக்ஸ்பிரஸ் ரெயில் இன்று காலை 11.40 மணியளவில் கரூர் ரெயில் நிலையத்தில் இருந்து புறப்பட்டு கரூர் திண்டுக்கல் செல்லும் ரயில்வே தண்டவாளத்தில் தாந்தோணி ரெயில்வே கேட் வடக்கு பகுதி அருகே சென்று கொண்டிருந்தது.




அப்போது ரெயில் தண்டவாளத்தின் மீது வைக்கப்பட்டிருந்த இரும்பு பொருள் மீது ரெயில் இன்ஜின் ஏறி கடந்து சென்றது. இதனால் இன்ஜினின் முன் சக்கரத்தில் சத்தம் கேட்டுள்ளது. இதையடுத்து ரெயில் ஓட்டுநர் வெள்ளியணை ரெயில் நிலையத்தில் 11.50 மணிக்கு ரெயிலை நிறுத்தி விட்டு, கரூர் ரெயில்வே போலீசருக்கு தகவல் தெரிவித்தார்.

இதனை தொடர்ந்து ரெயில்வே ஊழியர்கள் மற்றும் ரெயில்வே போலீசார் சம்பவ இடத்திற்கு நேரில் சென்று பார்வையிட்டனர். தொடர்ந்து தண்டவாளத்தில் ஏற்பட்ட சிறு சேதத்தை சரி செய்யும் பணியில் ஈடுபட்டனர். இதனிடையே வெள்ளியணை ரெயில்வே நிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்ட கோவை நாகர்கோவில் எக்ஸ்பிரஸ் ரெயிலில் மாற்று இன்ஜின் பொருத்தப்பட்டு சுமார் 1.05 மணிக்கு நாகர்கோவிலுக்கு புறப்பட்டு சென்றது.

தண்டவாளத்தில் இரும்பு பொருளை வைத்துரெயிலைகவிழ்க்க சரி செய்து உள்ளனரா? என்ற சந்தேகம் எழுந்துள்ள நிலையில்,

இந்த செயலை செய்தவர்கள் யார்? என்பது தொடர்பாக ரெயில்வே போலீசார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

# ஆசை வார்த்தை கூறி பிளஸ்1 மாணவியை கடத்திய வாலிபர் போக்சோவில் கைது

நெல்லை, ஜன.20

நெல்லை மாவட்டம் கல்லிடைக்குறிச்சி பகுதியைச் சேர்ந்தவர் சந்தானம் (24). இவர் கோவை மாவட்டம் சூலூரில் தங்கியிருந்து ஒரு ஓட்டலில் தொழிலாளியாக பணியாற்றி வந்தார். அப்போது தொண்டாமுத்தூரில் உள்ள ஒரு அரசு பள்ளியில் படிக்கும் பிளஸ் 1 மாணவிக்கும், சந்தானத்துக்கும் இடையே இன்ஸ்டாகிராம் மூலம் பழக்கம் ஏற்பட்டது. நாளடைவில் அந்த பழக்கம் காதலாக மாறியது. இதையடுத்து அந்த மாணவியை ஆசை வார்த்தை கூறி சந்தானம் தனது சொந்த ஊருக்கு கடத்தி சென்றதாக தெரிகிறது. இதுகுறித்த புகா ரின்பேரில் தொண்டாமுத்தூர் போலீசார், நெல்லைக்கு விரைந்து சென்று சந்தானத்தை போக்சோ சட்டத்தின்கீழ் கைது செய்தனர். மேலும் மாணவியை மீட்டு பெற்றோரிடம் ஒப்படைத்தனர்.



# கோமியம் குடுத்தால் ஜுரம் சரியாகிடுமா? ஐஐடி இயக்குநர் கருத்துக்கு கார்த்தி சிதம்பரம் எதிர்ப்பு

சென்னை, ஜன.20

மாட்டுப் பொங்கல் பண்டிகையை ஒட்டி, சென்னை மேற்கு மாம்பலத்தில் உள்ள கோசாலையில் கோ பூஜை நடைபெற்றது. இந்தபூஜையில் சென்னை ஐ.ஐ.டி. இயக்குநர் காமகோடி சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். அந்த நிகழ்ச்சியில் பேசிய அவர் கோமியம் குடித்தால் ஜுரம் சரியாகிடும் என்றார்.





மாணவர்களுக்கு கல்வியை போதிக்கும் இந்தியாவின் உச்சபட்ச கல்வி நிறுவனத்தின் இயக்குநர் அறிவியலுக்கு புறம்பாக பேசியது கடும் விமர்சனத்துக்கு உள்ளாகியுள்ளது. காமக்கோடியின் இந்த கருத்தை நெட்டிசன்கள் கடுமையாக விமர்சித்து வருகின்றனர். மேலும், பலர் கடும் கண்டனங்களை தெரிவித்து வருகின்றனர்.

அந்த வகையில், காங்கிரஸ் எம்.பி. கார்த்தி சிதம்பரம் ஐ.ஐ.டி. இயக்குநருக்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில், "ஐ.ஐ.டி. மெட்ராஸ் இயக்குநரே போலி அறிவியலை பரப்புவது பொருத்தமற்றது," என்று குறிப்பிட்டுள்ளார்.

கோ பூஜை நிகழ்வில் பேசிய ஐ.ஐ.டி. இயக்குநர் காமகோடி, "எனது தந்தை ஒரு சந்நியாசியிடம் சென்று எனக்கு ஜுரம் அடிக்கிறது. நான் மருத்துவரை சென்று பார்க்கவா என்று கேட்டுள்ளார்.

அதற்கு அந்த சந்நியாசி அதெல்லாம் வேண்டாம், பசுமாட்டு கோமியம் குடித்தால் ஜுரம் சரியாகி விடும் என்று கூறியுள்ளார். உடனடியாக அவர் கோமியத்தை பருகியுள்ளார். அடுத்த 15 நிமிடத்தில் அவருக்கு ஜுரம் சரியாகி விட்டது."

"கோமியம் மிகப்பெரிய மருந்து, பிணிகளைநீக்கும். உடல் பாதிப்புகளை ஏற்படுத்தும் பாக்டீரியா மற்றும் பூஞ்சைகளை எதிர்க்கும் சக்தி கோமியத்தில் இருப்பதால், அவ்வப்போது கோமியத்தை எடுத்துக் கொள்ள வேண்டும்" என்று கூறினார்.

# சவுக்கு சங்கருக்கு ஜாமீன் வழங்கி சென்னை ஐகோர்ட்டு உத்தரவு

சென்னை, ஜன.20

நில மோசடி தொடர்பாக தனது யூ டியூப் சேனலில் சவுக்கு சங்கர் தவறான தகவல் பரப்புவதாக சென்னை மத்திய குற்றப்பிரிவின் நில மோசடி பிரிவு இன்ஸ்பெக்டர்சிவசுப்ரமணியன் புகார் அளித்தார்.

இந்த வழக்கில் கடந்த ஆண்டு டிசம்பர் 24ஆம் தேதி சவுக்கு சங்கர் கைது செய்யப்பட்டார். அவரது ஜாமீன் மனு கீழமை நீதிமன்றத்தில் நிராகரிக்கப்பட்ட நிலையில், சென்னை ஐகோர்ட்டில் மேல் முறையீடு செய்தார். இந்த மனு நீதிபதி ஜி ஆர் சுவாமிநாதன் முன்பு விசாரணைக்கு வந்தது. வழக்கை விசாரித்த நீதிபதி, சவுக்கு சங்கருக்கு ஜாமீன் அளித்து உத்தர விட்டார்.



# 'ரேகா சித்திரம்' படத்தை பாராட்டிய நடிகை கீர்த்தி சுரேஷ்



நடிகர் ஆசிப் அலி நடிப்பில் 'ரேகா சித்திரம்' திரைப்படம், கடந்த 9ம் தேதி வெளியானது. 'கிஷ்கிந்தா காண்டம்' படத்துக்கு அடுத்ததாக ஆசிப் அலி நடித்த திரில்லர் படமாக இது அமைந்தது. மம்முட்டி நடித்த 'தி ப்ரீஸ்ட்' படத்தின் மூலம் பிரபலமான ஜோபின் டி சாக்கோ இந்தப் படத்தை இயக்கியுள்ளார். இப்படம் இன்வெஸ்டிகேஷன் திரில்லர் கதைக்களத்தில் உருவாகி உள்ளது. இந்தப் படத்தில் அனஸ்வரா முக்கியக் கதாபாத்திரத்தில் நடித்திருப்பதுடன், இந்திரன்ஸ், நிஷாந்த் சாகர், ஜரின் ஷிஹாப், சித்திக் மற்றும் பலரும் நடித்துள்ளனர்.

நடிகர் ஆசிப் அலியின் 'ரேகா சித்திரம்' படம் நன்றாக இருப்பதாகக் கூறி, படக்குழுவினரைப் பாராட்டி, நடிகை கீர்த்தி சுரேஷ் இன்ஸ்டாகிராம் ஸ்டோரியில் பதிவிட்டுள்ளார். அவரது பதிவில், " ரேகா சித்திரம் படத்தின் திரைக்கதை, எழுதப்பட்ட விதம், ஒவ்வொரு குறிப்பும் திகைப்படைய வைத்தது. அன்ஸ்வரா சிறப்பாக நடித்தது நேசிப்பதாக இருந்தது. ஆசிப் அலியின் கதைத் தேர்வு குறிப்பிடக் கூடியதாய் இருக்கிறது " என்று கூறியுள்ளார். இப்படத்தை பாராட்டிய நடிகை கீர்த்தி சுரேஷுக்கு படக்குழு நன்றி தெரிவித்துள்ளது.

இப்படம் 4 நாட்களில் உலகம் முழுவதும் ரூ. 28.3 கோடி வசூலித்துள்ளதாக படக்குழு அறிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# ஜெய்ப்பூர் சர்வதேச திரைப்பட விழாவில் 'கோழிப்பண்ணை செல்லதுரை' படத்திற்கு அங்கீகாரம்




தென்மேற்கு பருவக்காற்று, நீர் பறவை, தர்மதுரை' 'மாமனிதன்' ஆகிய வெற்றி படங்களை இயக்கி கவனம் பெற்றவர் இயக்குனர் சீனு ராமசாமி. இவர் தற்போது 'கோழிப்பண்ணை செல்லதுரை' என்ற படத்தை இயக்கியுள்ளார். இந்த படத்தில் யோகி பாபு, ஏகன், பிரிகிடா, ஐஸ்வர்யா தத்தா, தினேஷ் முத்தையா, சத்யா உட்பட பலர் நடித்துள்ளனர். இப்படத்திற்கு என்.ஆர். ரகுநந்தன் இசை அமைத்துள்ளார். கிராமத்துக் கதைக்களத்தில் அண்ணன் தங்கை உறவைப் பேசும் படமாக உருவாகியுள்ள, இப்படம் கடந்த செப்டம்பர் 20ம் தேதி திரையரங்குகளில் வெளியாகி ரசிகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்றது. "உறவுகளின் மேன்மையை, அன்பைச் சொல்லும் திரைப்படம்" என அனைவரும் பாராட்டி வருகிறார்கள். ஆக்லெண்ட் சர்வதேச திரைப்பட விழாவில் தேர்வான முதல் தமிழ்ப்படம் என்கிற பெயரையும் இது பெற்றுள்ளது. ஜப்பானில் நடைபெற்ற 10 வது டாப் இண்டி திரைப்பட விருது எனும் பன்னாட்டு திரைப்பட விழாவில் 'கோழிப்பண்ணை செல்லதுரை' படத்தில் நடித்த சத்யா தேவிக்கு சிறந்த நடிகைக்கான விருது கிடைத்தது. மேலும் சிறந்த திரைப்படம் மற்றும் சிறந்த ஒளிப்பதிவாளர் எனும் விருதுகளுக்கு நாமினேஷன் என்ற தகுதியை பெற்றது. ஸ்பெயின் நாட்டில் 36 வருடமாக நடந்து வரும் பாரம்பரிய ஜிரோனா திரைப்பட விழாவில் சிறந்த படமாக இயக்குனர் சீனு ராமசாமியின் 'கோழிப்பண்ணை செல்லதுரை' தேர்வு செய்யப்பட்டுள்ளது. முதன்முதலாக ஒரு தமிழ் திரைப்படம் இவ்விழாவில் தேர்வு செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது. 17வது ஜெய்ப்பூர் சர்வதேச திரைப்பட விழாவில், இயக்குனர் சீனு ராமசாமிக்கு 'கோழிப்பண்ணை செல்லதுரை' திரைப்படத்துக்காக சிறந்த இயக்குனர் விருது மற்றும் சிறந்த திரைக்கதைக்கான விருதும் வழங்கப்பட்டது.

# நடிகர் ரவி ஆர்த்தி விவாகரத்து வழக்கு ஒத்திவைப்பு

நடிகர் ரவி தனது மனைவி ஆர்த்தியுடன் கருத்து வேறுபாடு ஏற்பட்டு பிரியப்போவதாக அறிவித்தார். இதைத்தொடர்ந்து 2009ம் ஆண்டு பதிவு செய்யப்பட்ட தங்களது திருமண பதிவை ரத்து செய்து மனைவி ஆர்த்தியிடம் இருந்து விவாகரத்து வழங்கக்கோரி ரவி மனுத்தாக்கல் செய்திருந்தார். இதனையடுத்து, விவாகரத்து கோரி ரவி தொடர்ந்த மனு மீதான விசாரணை சென்னை குடும்ப நல கோர்ட்டில் நடந்து வருகிறது. அங்கு நடிகர் ரவி மற்றும் அவரது மனைவி இருவரும் சமரச தீர்வு மையத்தில் பேச்சுவார்த்தை நடத்த உத்தரவிடப்பட்டது. இதனையடுத்து, 3 முறை நடிகர் ரவி மற்றும் அவரது மனைவி ஆர்த்தி சமரச தீர்வு மையத்தில் ஆஜராகி பேச்சுவார்த்தை நடத்தினர். ஆனால், இந்த பேச்சுவார்த்தையில் சமரச தீர்வு எதுவும் எட்டப்படவில்லை. இந்நிலையில், இன்று அந்த வழக்கு குடும்ப நல கோர்ட்டில் விசாரணைக்கு வந்தது. இருவரும் காணொலி வாயிலாக ஆஜரானநிலையில், சமரச பேச்சுவார்த்தையை நிறைவு செய்த பின்னர் விவாகரத்து வழக்கு விசாரிக்கப்படும் என்று நீதிபதி உத்தரவிட்டார். மேலும், வழக்கின் விசாரணையை அடுத்த மாதம் 15ம் தேதிக்கு ஒத்திவைத்தார்.

# நோமன் அலி அபார பந்துவீச்சு... வெஸ்ட் இண்டீஸ் 137 ரன்களில் ஆல் அவுட்



பாகிஸ்தானுக்கு சென்றுள்ள வெஸ்ட் இண்டீஸ் கிரிக்கெட் அணி 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் ஆடி வருகிறது. இதன் முதலாவது டெஸ்ட் போட்டி முல்தானில் நடைபெற்று வருகிறது. இந்த ஆட்டத்திற்கான டாசில் வென்ற பாகிஸ்தான் முதலில் பேட்டிங்கை தேர்வு செய்தது. பனிமூட்டம் காரணமாக ஆட்டம் தொடங்குவதில் சிறிது கால தாமதம் ஆனது.

அதன்பின் சிறிது நேரத்திற்கு பின் முதல் இன்னிங்சை தொடங்கிய பாகிஸ்தான்நேற்றையமுதல்நாளில்41.3ஓவர்களில்4விக்கெட்டுக்கு 143 ரன் எடுத்திருந்தபோது போதிய வெளிச்சமின்மையால் ஆட்டம் நிறுத்தப்பட்டது. அத்துடன் முதல் நாள் ஆட்டம் முடிவுக்கு வந்தது. சாத் ஷகீல் 56 ரன்களுடனும், ரிஸ்வான் 51 ரன்களுடனும் களத்தில் இருந்தனர்.

இந்நிலையில்டெஸ்ட்போட்டியின்2வதுநாள்இன்றுநடைபெற்று வருகிறது. பனிமூட்டத்தால் இன்றும் ஆட்டம் தொடங்க காலதாமதம் ஆனது. தொடர்ந்து பேட்டிங் செய்த பாகிஸ்தான் தனது முதல் இன்னிங்சில் 230 ரன்னுக்கு ஆல் அவுட் ஆனது. பாகிஸ்தான் தரப்பில் அதிகபட்சமாக சாத் ஷகீல் 84 ரன்கள் எடுத்தார். வெஸ்ட் இண்டீஸ் தரப்பில் ஜெய்டன் சீல்ஸ், வாரிகன் ஆகியோர் தலா 3 விக்கெட் வீழ்த்தினர்.

இதையடுத்து தனது முதல் இன்னிங்சை தொடங்கிய வெஸ்ட் இண்டீஸ் அணி, பாகிஸ்தானின் பந்துவீச்சை தாக்குப்பிடிக்க முடியாமல் அடுத்தடுத்து விக்கெட்டுகளை இழந்தது. வெறும் 25.2 ஓவர்கள் மட்டுமே தாக்குப்பிடித்த வெஸ்ட் இண்டீஸ் தனது முதல் இன்னிங்சில் 137 ரன்னுக்கு அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து ஆல் அவுட் ஆனது.

வெஸ்ட் இண்டீஸ் தரப்பில் அதிகபட்சமாக வாரிகன் 31 ரன்கள் எடுத்தார். பாகிஸ்தான் தரப்பில் நோமன் அலி 5 விக்கெட், சஜித் கான் 4 விக்கெட் வீழ்த்தினர். இதன் மூலம் 93 ரன் முன்னிலையுடன் பாகிஸ்தான் தனது 2வது இன்னிங்சை ஆடி வருகிறது.

# சாம்பியன்ஸ் டிராபி தொடர்; இந்திய அணி அறிவிப்பு சாம்சனுக்கு இடமில்லை



8 அணிகள் கலந்து கொள்ளும் சாம்பியன்ஸ் டிராபி கிரிக்கெட் தொடர் அடுத்த மாதம் 19ந் தேதி தொடங்கி மார்ச் 9ந் தேதி வரை பாகிஸ்தான் மற்றும் துபாயில் நடக்கிறது. இந்த தொடருக்கான அணிகள் இரு பிரிவாக பிரிக்கப்பட்டுள்ளன. அதன்படி குரூப் ஏவில் இந்தியா, பாகிஸ்தான், நியூசிலாந்து, வங்காளதேசம் அணிகளும், குரூப் பியில் ஆஸ்திரேலியா, இங்கிலாந்து, தென் ஆப்பிரிக்கா, ஆப்கானிஸ்தான் அணிகளும் இடம்பிடித்துள்ளன.

ஒவ்வொரு பிரிவிலும் உள்ள அணிகள் தங்கள் பிரிவில் உள்ள மற்ற அணிகளுடன் தலா ஒரு முறை மோத வேண்டும். லீக் சுற்று முடிவில் ஒவ்வொரு பிரிவிலும் முதல் இரு இடங்களை பிடிக்கும் அணிகள் அரையிறுதிக்கு முன்னேறும். இந்த தொடருக்கான அணிகளை கடந்த 12ம் தேதிக்குள் அறிவிக்க வேண்டும் என ஐ.சி.சி. காலக்கெடு விதித்திருந்தது.

ஆனால், பி.சி.சி.ஐ சாம்பியன்ஸ் டிராபி தொடருக்கான அணியை அறிவிக்க ஐ.சி.சி.யிடம் கூடுதல் கால அவகாசம் கேட்டிருந்தது. இதையடுத்து, சாம்பியன்ஸ் டிராபி தொடர் மற்றும் இங்கிலாந்துக்கு எதிரான ஒருநாள் தொடர்களுக்கான இந்திய அணி இன்று பிற்பகல் 12.30 மணி அளவில் அறிவிக்கப்படும் என தகவல் வெளியாகி இருந்தது. ஆனால், அணி தேர்வு கூட்டம் நிறைவு பெற கால தாமதம் ஏற்பட்டது. இதனால் அணி உரிய நேரத்தில் அறிவிக்கப்படவில்லை.

இந்நிலையில், நீண்ட நேர தாமதத்திற்கு பிறகு சாம்பியன்ஸ் டிராபி தொடர் மற்றும் இங்கிலாந்துக்கு எதிரான ஒருநாள் தொடர்களுக்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது. தலைமைத் தேர்வாளர் அஜித் அகர்கர் மற்றும் கேப்டன் ரோகித் சர்மா இணைந்து அணியை அறிவித்தனர். இந்த அணிகளுக்கு ரோகித் சர்மா கேப்டனாகவும், சுப்மன் கில் துணை கேப்டனாகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்திய அணியில் ஸ்ரேயாஸ் ஐயர் மீண்டும் இடம் பிடித்துள்ளார். அதே சமயம் விஜய் ஹசாரே தொடரில் ரன் வேட்டை நடத்திய கருண் நாயருக்கு அணியில் இடம் கிடைக்கவில்லை. மேலும், டி20 அணியில் தொடக்க வீரராக களம் இறங்கி வரும் சாம்சனுக்கும் இந்திய அணியில் இடம் கிடைக்கவில்லை.

இங்கிலாந்துக்கு எதிரான ஒருநாள் தொடர் மற்றும் சாம்பியன்ஸ் டிராபி தொடருக்கான இந்திய அணி விவரம்:

ரோகித் சர்மா (கேப்டன்), சுப்மன் கில் (துணை கேப்டன்), விராட் கோலி, ஸ்ரேயாஸ் ஐயர், கே.எல்.ராகுல் (விக்கெட் கீப்பர்), ஹர்திக் பாண்ட்யா, அக்சர் படேல், வாஷிங்டன் சுந்தர், குல்தீப் யாதவ், ஜஸ்ப்ரீத் பும்ரா, முகமது ஷமி, அர்ஷ்தீப் சிங், ஜெய்ஸ்வால், ரிஷப் பண்ட் (விக்கெட் கீப்பர்), ரவீந்திர ஜடேஜா, ஹர்ஷித் ராணா (இங்கிலாந்துக்கு எதிரான ஒருநாள் தொடருக்கு மட்டும்).

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.